அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்:68/2016
தேதி : 10.04.2016

# கேரள மாநிலத்தில் நடந்த தீ விபத்து சமக நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அனுதாபச் செய்தி

கேரள மாநிலத்தில் கொல்லம் அருகே பரவூரில் பூட்டிங்கல் கோவிலில் ஏற்பட்ட தீ விபத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பலியானதோடு மேலும் நூற்றுக்கணக்கானோர் படுகாயம் அடைந்த சம்பவம் மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அளிப்பதாக உள்ளது. இது போன்ற திருவிழாக்காலங்களில் மக்கள் நெரிசல் ஏற்படக்கூடிய தருணங்களில் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டிருந்தால் இத்தகைய அசம்பாவிதம் நிகழாமல் தடுத்திருக்கலாம். துரதிருஷ்டவசமான இவ்விபத்தில் பலியானவர்களின் குடும்பத்தினருக்கு என் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இவ்விபத்தில் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய என் பிரார்த்தனையைத் தெரிவித்துக் கொள்கிறேன். கேரள அரசு இவ்விபத்தில் பலியானவர்களின் குடும்பத்தினருக்கும், காயமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கும் தகுந்த இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்